RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22s37

OPEN ACCESS

# க.நா. சுப்ரமணியனின் பொய்த்தேவு நாவலும் கடவுள் கருத்தாக்கமும்

சா. வனிதா [அ, *]

[அ] தமிழ்த்துறை, செல்லம்மாள் மகளிர் கல்லூர், கிண்டி, சென்னை - 600032, தமிழ்நாடு, இந்தியா

# K.N.Subramanian's Novel Poithevu and the Concept of God

S. Vanitha [a, *]

[a] Department of Tamil, Chellammmal Women's College, Guindy, Chennai-600032, Tamil Nadu, India

* Corresponding Author: vanitha02k@gmail.com

Received: 30-03-2021
Revised: 05-04-2022
Accepted: 01-05-2022
Published: 27-05-2022

Check for updates

**ABSTRACT**

From ancient times, the gods and the rites of worship have undergone various changes to protect the needs of human life. In Poithevu novel, which is based on these ideas, while we examine the values of God, we glorify today's basic necessities and the thoughts associated with them, as well as our efforts, thoughts, dreams, desires, power, selfish influence, and fame as Gods. We get all of these accolades with great effort. We relish what we receive. At one point, we realize ourselves, and understand the instability of life. In the state of comprehending the instability of life, all these estimates of man that have been glorified as God turn out to be false. He has created a novel depicting that God is not false, but the people who created God as an instrument for their needs, lied about what they portrayed. Although the novel received much criticism in its time, the work of K.N.S., which emphasized the idea that man should realize God without falsehood while he was alive, is thoughtful and relevant. This article, thus, establishes through scholarly explanations, how his opinion of man creating God and worshiping the deities for the protection of selfish needs from time to time is appropriate.

**Keywords:** Kadavul, Deivam, Karuthakkam, Achcham, Thevaigal, Pathukappu, Panam.

## முன்னுரை

பண்டைய மனிதனின் இனக்குழு சமூக அமைப்புகள் சிதைக்கப்பட்டு உருவான வாழ்க்கை முறையில், மனிதன் இயற்கை மீது ஆதிக்கம் செலுத்தினான். இயற்கையின் சக்தி அவனுக்கு மிகப்பெரிய சவாலாக விளங்கியது. இயற்கையின் ஆற்றல்களை நினைத்து அச்சமடைந்தான். ஏதாவது செய்து இயற்கையின் ஆற்றல்களை அமைதிப்படுத்த முயன்றான். அம்முயற்சியில் கடவுள் பற்றிய கொள்கை மனிதனுக்கு ஏற்பட்டிருக்க வேண்டும்.

பழந்தமிழ் மக்கள் இடி, மின்னல், மழை, பெருவெள்ளம், புயல், நிலநடுக்கம், காட்டுத்தீ போன்றவற்றில் இருந்து தங்களைக் காத்துக் கொள்ளும் முயற்சியும், கொடிய வேட்டை விலங்குகளிடமிருந்து தங்களின் உயிரைக் காப்பாற்றிக் கொள்ளும் முயற்சியும் மனிதனைச் சிந்திக்கச் செய்தது. சிந்தனையின் விளைவு இயற்கையை மனிதன் தெய்வமாகக் கருதி வழிபட வேண்டிய சூழல் ஏற்பட்டது.

இயற்கைக்கும் தங்களுக்கும் இடையே ஏதோவொரு மாய ஆற்றல் இயங்குவதாக பண்டைய மக்கள் உணர்ந்தனர். மந்திரச் செயல்கள் மூலம் இயற்கையுடன் தொடர்புக் கொண்டு அதனை அமைதிப்படுத்த முயன்றதன் விளைவாகக் கடவுள் பற்றிய எண்ணம் உருவானது.

இக்கடவுள் நம்பிக்கை பற்றிக் குறிப்பிடும் க. காந்தி, இயற்கையின் அச்சந்தரும் செயல்களே மனிதனைக் கடவுள் நெறிக்கு இட்டுச் சென்றதென்பது மானிடவியலாரின் கருத்தாகும். மனிதன் தன் ஆற்றல் ஒரு வரம்புக்குட்பட்டது என்பதை உணர ஆரம்பித்த நிலையில் கடவுட்கோட்பாடு உருவாகியது, தன் அறிவுக்கும் ஆற்றலுக்கும் முறையே புலப்படாத, உட்படாதவற்றின் மீது அச்சத்தின் காரணமாக மனிதன் நம்பிக்கை கொள்ளத் தொடங்கினான். அந்நம்பிக்கையின் அடிப்படையில் அவனிடம் கடவுள் நம்பிக்கை தோன்றியதெனலாம்!! என்பார் (Gandhi, 2008).

இவரது கருத்தை ஏற்கும் விதமாக தொ. பரமசிவன் இக்கடவுள் நம்பிக்கை பற்றி எடுத்துரைக்கும் போது, "மிகத் தொடக்க காலத்தில் இயற்கை மனிதனுக்கு ஒரு புதிராகத் தோற்றமளித்தது. இருள், சூரியன், பாம்பு ஆகிய இயற்கைப் பொருள்கள் மனிதனுக்குப் புதிராக இருந்தன, அதே நேரத்தில் அச்சத்தை ஊட்டின. ஆயினும் மனிதன் இயற்கையே தனக்கு உணவை அளிக்கிறது என்று அறிந்துகொண்டான். அச்சமும் உணவுத் தேவையும் கொண்ட மனிதன் இயற்கையின் பேராற்றலை வணங்கத் தலைப்பட்டான். கூட்டு உழைப்பினால் உணவைத் தேட மனிதன் முற்பட்ட போது ஆற்றல் மிகுந்த இயற்கையைத் தனக்கு இணங்க வைக்க முயன்றான். பழங்குடி மக்களின் பாட்டும் ஆட்டமும் அவர்களுடைய உணவுத் தேவையோடு தொடர்புடையவை. வேட்டை மிருகங்கள் நிறைய கிடைப்பதற்காகவும், பின் உணவுக்குரிய பயிர்கள் நிறைய விளைவதற்காகவும் அதற்கான மழை பெறுவதற்காகவும் இயற்கையை அவர்கள் வேண்டினார்கள். அதற்காகப் பயிர்கள் விளைவது போன்றும் மழை பெய்வது போன்றும் ஆடிக்காட்டினார்கள். இவ்வாறு "போலச் செய்து காட்டுவதன்" மூலம், இயற்கையை இணங்க வைக்க முடியும் என்று நம்பினர்" என்பார் (Paramasivan, 1995). மேற்குறிப்பிட்ட அறிஞர்களின் விளக்கங்களால் மனிதனின் அச்சத்தின் காரணமாகவே கடவுள் என்ற கருத்தாக்கம் உருவானது. எது அவனுக்கு அச்சம் தந்ததோ அதனைப் பணிவதன் மூலம் அதனை அமைதிப்படுத்த முடியும் என்று உறுதியாக நம்பினான். தாம் வணங்கிய அக்கடவுளை மகிழ்ச்சிப்படுத்த மந்திரங்களும், சடங்குகளும், வழிபாடுகளும் மனிதனால் உருவாக்கப்பட்டு நிகழ்த்தப்பட்டன.

இவ்வாறு காலந்தோறும் மனிதனின் அச்சம் காரணமாக எழுந்த தெய்வநம்பிக்கை அடுத்த நிலையில், தேவைகளை நிறைவேற்றும் கருவியாக கடவுள் உருவாக்கப்பட்டுள்ளார். இக்கடவுள் தெய்வம் பற்றிய கருத்தாக்கங்கள் காலந்தோறும் பல்வேறு மாற்றங்களைப் பெற்று வந்துள்ளன. அவ்வகையில் க.நா.சு வின் படைப்பான "பொய்த்தேவு" நாவலில் கடவுள் பற்றிய கருத்தாக்கம் என்ன? என்பதை ஆய முனைகிறது இக்கட்டுரை.

## க.நா. சுப்ரமணியம்

தமிழ் இலக்கியமெனும் பரந்த பரப்பில் தனக்கெனத் தனி முத்திரை பதித்தவர் க.நா.சுப்ரமணியம். உலக இலக்கியங்களுக்கு இணையாகத் தமிழ் இலக்கியம் வளர வேண்டும் என்று பன்முகத் தளங்களில் அயராது பணியாற்றியவர். அவர் புதினங்கள், சிறுகதைத் தொகுப்புகள், இலக்கிய விமர்சனங்கள், மொழிபெயர்ப்புகள் எனப் பன்முகத் தளங்களில் பயணித்தவர். 1912 -ஆம் ஆண்டு முதல் 1988 -ஆம் ஆண்டு வரை இம்மண்ணுலகில் எழுபத்தாறு ஆண்டுகள் வாழ்ந்த க.நா.சு, உலகின் சிறந்த இலக்கிய ஆக்கங்களைத் தமிழில் மொழிபெயர்த்துள்ளார். அதற்காகக் கடுமையாக உழைத்தவர். அதேபோல எந்தவொரு படைப்பின் மீதும் விமர்சனங்களை உள்ளதை உள்ளவாறு அஞ்சாமல் துணிச்சலோடு எடுத்துரைத்தவர். அதனாலோ! என்னவோ! க.நா.சு அவர்கள், அவர் வாழ்ந்த காலத்தில் மக்களால் ஒரு விமர்சகராகவும் மொழிபெயர்ப்பாளராகவுமே அறியப்பட்டார்.

க.நா.சு அறுபது ஆண்டு காலம் எழுத்தோடே வாழ்ந்தவர். இவர் மணிக்கொடி, சூராவளி, சந்திரோதயம், சரஸ்வதி, தேனி, இலக்கியவட்டம், எழுத்து இறுதியாக முன்றில் போன்ற இதழ்களோடு தொடர்பிலிருந்ததோடு சில இதழ்களை நடத்தியும் உள்ளார். இவரது படைப்புகளில் பெரும்பாலானவை பத்திரிக்கைகளில் வெளிவந்து நூல் வடிவம் பெற்றவை. தமிழைப் போலவே ஆங்கிலத்திலும் எழுதியவர். இவரது எழுத்துக்களில் பொய்த்தேவு நாவல் தனிச்சிறப்புப் பெற்றது. இது நாவல்

வெளிவந்த காலத்தில் உருவம் உள்ளடக்கம் ஆகிய இரண்டிலும் முழுமையுடைய ஆகச்சிறந்த கலைப்படைப்பு ஆகும்.

## பொய்த்தேவு

"பொய்த்தேவு" நாவலின் பெயரே! இதன் பொருள் என்ன? என்ற வினா எழுப்பி விடை கண்ட பின்னரே நாவலின் பக்கங்களைப் புரட்ட வைக்கிறது. 'தேவு' -என்றால் தெய்வம், கடவுள் என்ற பொருள் பகர்கிறது.'பொய்த்தேவு' என்பது பொய்யான கடவுள் என்று அர்த்தமல்ல, உண்மைக் கடவுள் என்பதன் பொருள் என்ன? என்ற கருத்தை வலியுறுத்தி இந்நாவலைக் க.நா.சு படைத்துள்ளார்.

இந்நாவல் கும்பகோணம் அருகே உள்ள சாத்தனூர் மேட்டுத் தெருவில் பிறந்த சோமுவின் சிறுவயது அனுபவங்கள், ஆசைகள், எண்ணங்கள், பணம் பற்றிய உருவகம், அதனை நோக்கிய அவரது வாழ்க்கைப் பயணத்தில் சோமசுந்தர முதலியாராகப் பணம், பதவி, அதிகாரம் செல்வாக்கு என உயர்ந்து அனுபவித்து, இறுதியில் சோமு பண்டாரமாகி தன்னை அறிந்து, உடல் பொருளின் நிலையாமையை உணர்ந்து, பெற்ற அனைத்தையும் துறந்த அவரது இறப்பு வரையிலான அனைத்து வாழ்க்கை அனுபவங்களையும், கடவுள் பற்றிய கருத்தாக்கத்தையும் ஒருநிலையில் பதிவு செய்துள்ளது. மற்றொரு நிலையில், சாம்பமூர்த்தி ராயர் அவரது மனைவியும் தம் செல்வங்களையெல்லாம் கண்மூடித்தனமான வழிபாட்டிலும், தான தருமங்கள் செய்து புண்ணியம் பெற்று மறுமை வாழ்விற்குச் செல்ல வேண்டும் என்று கடவுளைத் தேடிக் கொண்டிருப்பவர்கள் என்ற இரு நிலைகளில் மனித வாழ்வைச் சித்திரிக்கும் சிறந்த படைப்பு ஆகும். க.நா.சு வின் பொய்த்தேவு நாவல், படிக்கும் ஒவ்வொருவரின் வாழ்வையும் திரும்பிப் பார்க்க வைப்பதோடு, சிந்திக்கவும் வைக்கிறது என்றால் மிகையாகும் (Subramanyam, 2007).

## பொய்த்தேவு - கடவுள் கருத்தாக்கம்

சாத்தனூர் மேட்டுத் தெருவில் விளிம்பு நிலைக் குடும்பத்தில் பிள்ளளயாகப் பிறந்த சோமு, அனைவராலும் புறக்கணிக்கப்பட்ட நிலையில், குழந்தைப் பருவத்திலிருந்து பெற்ற அனுபவங்களின் மூலமாகப் பணம் தான் இவ்வுலகின் மிகப்பெரிய சக்தி என்று மனதில் பதிந்து விடுகிறது. அதன் தொடர்ச்சியாகச் சோமுவின் பணத்தை நோக்கிய தேடலில் பணத்தைக் கடவுளாகவே கருதி வணங்கினார். மற்றவர்கள் வணங்கிய கடவுள்களை அவர் வணங்கியது இல்லை. மாணிக்கம் செட்டியார் என்ற நண்பரிடம் கடவுள் பற்றிய தம் கருத்தைக் கூறிய சோமசுந்தர முதலியார்,

"எனக் கென்னவோ கும்பிடனும், அர்ச்சனை செய்யனும்னா நாம்ப எல்லோரும் நம்ம பணப் பெட்டிக்கும் பாங்கிப் புஸ்தகத்துக்குந்தான் அதெல்லாம் செய்யலாமே தவிர கோயிலுக்குப் போகக்கூடாதுன்னு தோனுது, உலகத்திலே வேறே ஏது ஸார் தெய்வம்? பணம் என்கிற ஒன்றுதான் தெய்வம்-கண்ணாலே காண்ற தெய்வம், வேறு தெய்வம் உண்டென்று சொல்கிறவர்கள் மறைப்பதற்காகப் பொய்த் தெய்வங்களை உண்டாக்கிப் பூசை செய்ய வேறு தொடங்கிவிடுகிறார்கள்" என்று மற்றவர்கள் அறியாமையில் உள்ளனர் எனக் குறைபட்டுக் கொள்வார் (Subramanyam, 2007). மேலும், சோமசுந்தர முதலியார் பற்றி மற்றவர்களின் கருத்தாக, "சோமசுந்தர முதலியார் சொன்ன வார்த்தைகள் விளையாட்டாகச் சொன்ன வார்த்தைகள் அல்ல. அவர் உண்மையில் பணம் ஒன்றுதான் உலகிலே உள்ள தெய்வம் என்கிற கொள்கையைக் கடைபிடித்து ஒழுகியவர். இரவும் பகலும், கனவிலும் நினைவிலும், பணம் என்கிற தெய்வத்தையே உபாசனை செய்து கொண்டிருந்தவர் அவர். பணத்துக்குப் போட்டியாக வேறு பொய்த்தெய்வங்களை சிறுஷ்டித்துக்கொண்டு மனிதர்கள் கஷ்டப்படுகிறார்களே என்று எண்ணிப் பிறர் பொருட்டுச் சில சமயம் வருந்தவும் ஆரம்பித்துவிடுவார்" என்றனர் (Subramanyam, 2007). ஆம் சோமசுந்தர முதலியார் கூறுவது போல, இன்றைய உலகில் ஒருவர் போற்றப்படுவதும், தூக்கி வைத்துக் கொண்டாடப்படுவதும், வாழ்த்துவதும் வீழ்த்துவதும் பணம் என்ற சக்தியால் என்பதை முற்றிலும் அறிந்த அவரது வாழ்க்கைப் பயணம் பணத்தை முன்னிருத்தியதாக இருந்தது.

ஆம், சோமசுந்தர முதலியார் பணம் என்ற தெய்வத்தை நோக்கி ஓடிக் கொண்டிருந்தார். அதில் பணம் என்ற தாகம் அதிகரித்ததே தவிர, தாகம் தீர்வதாகவே இல்லை. பணம் பணத்தோடு சேரும் என்பார்கள் அதுபோல அவரிடம் சேர்ந்து, அவரது மதிப்பும் உயர்ந்து கொண்டே சென்றது. சோமசுந்தர முதலியார் வாழ்வில் ஏற்றம் கொண்டிருக்க, அவரை ஏற்றி விட்ட சாம்பமூர்த்தி ராயருடைய செல்வமும் செல்வாக்கும் குறைந்து கொண்டிருந்தது. இவ்விருவரும் தங்கள் தேவையை அடைய இருவேறு நிலைகளில் பயணித்துக் கொண்டிருந்தார்கள். இருவருக்கும் அவர்கள் சுயநலத்தை அடைய பணம் என்ற ஆயுதமே பேருதவி புரிந்தது. சோமசுந்தர முதலியாருக்கு பணத்தின் அருமை நன்றாகத் தெரியும். எனவேதான், பணத்தைக் கடவுளாக வணங்கினார். ஆனால் செல்வத்திலேயே திளைத்த ராயருக்கும் அவரது மனைவிக்கும் செல்வத்தின் தேவை பற்றியோ, அதன் செல்வாக்குப் பற்றியோ தெரியாது. அவர்களைப் பற்றிக் குறிப்பிடும் க.நா.சு,

“கணவனுக்கும் மனைவிக்கும் உலக விவகாரங்களில் அனுபவமோ ஈடுபாடோ சிரத்தையோ அவ்வளவாக இல்லை. பணம் என்றாலே துச்சமாகக் கருதியவர்கள் அவர்கள்-துச்சம் என்று சொல்வது வாய்ப் பிசகு, உண்மை வாழ்க்கை வழிகளுக்கெல்லாம் எதிர் என்று பணத்தைக் கருதினார்கள் அவர்கள். பணத்தையே லஷ்யமாகக் கொண்டு வாழ்ந்த மற்றச் சாத்தனூர் வாசிகளைப் பற்றி அவர்கள், “ஐயோ பாவம்! மூடர்கள்! என்று எண்ணினார்கள். “அவர்களுக்கும் கண் திறக்க அருளேன்! என்று தங்கள் ஈசனைப் பிரார்த்தித்தனர். அவர்கள் இருவருடைய சிந்தனைகளும் ஆத்மிகமான ஒரு நினைவிலே தெய்வம் என்கிற தத்துவத்திலே, புண்ணியம் காரணமாக மோஷமுண்டு என்கிற ஒரு லஷ்யத்திலே சென்று லயித்திருந்தன. இந்த வாழ்க்கையைப் பொருட்டாகக் கருதவே இல்லை அவர்கள் - இது பின்னால் வர இருந்த ஒரு நிம்மதியான வாழ்க்கைக்குக் கொண்டு போய்ச் சேர்க்கும் வழியே தவிர வேறல்ல என்று எண்ணினார்கள். இந்த வழியியிலே நேரே நடந்து அந்த லஷ்யத்தை எட்ட வேண்டுமே என்கிற ஒரே கவலைதான் அவர்களுக்கு” என்பார் (Subramanyam, 2007). ஆமாம் சாம்பமூர்த்தி ராயரும் அவரது மனைவி கங்காபாயும் மறுமை வாழ்விற்காகப் புண்ணியத்தைச் சேர்த்துக் கொண்டிருந்தனர். அதற்காக,

“அவர்களுடைய அகக் கண்களுக்கு எதிரே சதாபாண்டு ரங்கன் வட்டமிட்டுக் கொண்டிருந்தான். அவர்களுடைய அகக் காதுகளிலே, “ஜே! ஜே! விட்டல்! என்கிற இன்ப கீதம் ஓயாமல் ஒழியாமல் ஒலித்துக் கொண்டிருந்தது. அதைத் தங்கள் பாக்கியம் என்றே அவர்கள் கருதினார்கள்” (Subramanyam, 2007).

சாம்பமூர்த்தி ராயரும் கங்காபாயும் தன்னலம் மறந்து பிறர் நலனைப் போற்றிய கதாபாத்திரங்களாக இந்நாவலில் படைக்கப்பட்டு இருந்தாலும், இவ்வுலக வாழ்வு எனும் பயணத்தில் அனைவரும் சுயநலத்தோடு தான் வாழ்ந்தாக வேண்டியுள்ளது. எண்ணிப் பார்த்தால் முற்றும் துறந்த முனிவர்கள் துறவிகள் கூட தம் மறுமை வாழ்வின் நற்கதிக்காகவே இம்மை வாழ்வில் தியாக வாழ்வு வாழ்கின்றனர். அவர்களிடம் கூட சுயநலமே மேலோங்கியுள்ளது. அவ்வகையில் சாம்பமூர்த்தி ராயரும் அவரது மனைவியும் நிகழ்கால வாழ்வில் சுயநலமற்றவர்களாக மற்றவர்களுக்குத் தோன்றினாலும், அவர்களும் சுயநலவாதிகள்தான். யாரும் மறுமை வாழ்வைக் கண்டதில்லை. ஆனால், அவர்கள் மறுமை வாழ்விற்காக உழைப்பு என்பது சிறிதுமின்றி தன்னிடமிருந்த அபரிமிதமான செல்வத்தால் புண்ணியங்களைச் செய்து கொண்டிருந்தனர். அக்காரியங்களைச் செய்ய அவர்களிடமிருந்த பணம் என்ற ஆயுதமே அவர்களுக்கு பேருதவி புரிந்தது. எவ்வாறு எனில், “தம் கையிலே பணம் தட்டவே கூடாது, வீட்டிலே தினம் நாற்பது ஐம்பது பேர் புரோகிதர்களும் விருந்தாளிகளும் சாப்பிட்டுக்கொண்டே இருக்க வேண்டும். தேகி என்று வந்து கெட்டவனுக்குக் காசோ பணமோ அரிசியோ நெல்லோ அள்ளிக் கொடுக்க வேண்டும்-இப்படி எல்லாம் எண்ணிக் கொண்ட, எண்ணியபடி நடக்கவும் முயன்ற சாம்பமூர்த்தி ராயரின் நிலங்கள் சிறிது சிறிதர்க் குறைந்தன-முப்பது வருஷங்களில் சாம்ப மூர்த்திராயர் சாத்தூரிலே இருந்த சாதாரண மிராசுதாரர்களில் ஒருவர் ஆகிவிட்டார்.”

ஆம் அவர்களுடைய செல்வம் சிறுகச் சிறுக அவர்களை விட்டு விலகிச் சென்று கொண்டிருந்தது. அவர்களுடைய செல்வத்தைப் போலவே செல்வாக்கும் குறைந்தது. இந்தக் காரணங்களால் எல்லாம் ராயர் குடும்பத்தின் தெய்வ பக்தியும், புண்ணிய காரியங்களும் சிறிதும் குறையவில்லை. இதனால் சாத்தனூர் வாசிகள் அவர்களைப் ‘பைத்தியக்காரர்கள்’ என்றே

நினைத்தார்கள். ஆனால், சாம்பமூர்த்தி ராயரோ! நிலைமையைச்சீர்செய்ய முற்படாமல், அதைப் பற்றிச் சிறிதும் எண்ணாமல், மீதமிருக்கும் செல்வத்தையும் கடவுளுக்காகக் கரைத்துக் கொண்டிருந்தார். அவர்களின் இந்நிலையை எண்ணி எண்ணி மனம் வெதும்பினார் சோமசுந்தர முதலியார், ஏன் எனில்? அவர்களிடம் கொண்ட நன்றிக் கடன் என்ற தெய்வம் அவர் மனதை வாட்டியது காரணமாகும்.

அதனால்தான் கண்முன்னே அவர்கள் வீழ்ந்து கொண்டிருப்பதைக் கண்டு நித்தம் வேதனை அடைந்தார். சோமசுந்தர முதலியாருக்கு சாம்பமூர்த்தி ராயர் போன்றோர் வணங்கிய பழமையான தெய்வங்களின் மீது நம்பிக்கை இல்லை. தம்முடைய முயற்சிகள் சார்ந்த எண்ணங்களையே கடவுளாகக் கருதினார்.

“மனிதனின் ஆசைகளும், கனவுகளும், லஷ்யங்களும், உருவே பெறாத பல சிந்தனைகளும், தெய்வங்கள் என்று பெயர் தருவதே சரியான விஷயம் என்று எனக்குத் தோன்றியது” (க.நா.சு, பொய்த் தேவு, முன்னுரை) என்று க.நா.சு குறிப்பிடும் இப்பொருண்மைகளையே சோமசுந்தர முதலியார் தெய்வங்களாகப் போற்றினார். க.நா.சு வின் இக்கருத்தாக்கங்கள் அனைத்தும் நிலையானது இல்லை. ஒரு நிமிடம் இருக்கும் மனித மனத்தின் ஆசைகள் கனவுகள் எண்ணங்கள் அடுத்தடுத்த நிமிடங்களில் இருப்பதில்லை. ஒரு நிலையில் போற்றியது மற்றொரு நிலையில் அதைப் பற்றிய அனுமானம் தாழ்கிறது.

அதேபோல பொய்த்தேவு நாவலில் சமூக மாற்றங்களுக்கு ஏற்ப காவிரி ஆறும், கும்பகோணம் ஊரும் உருமாறி சென்றதைப் போல, சோமுவின் பெயரும் உருமாறுகிறது. சோமு சோமசுந்தர முதலியாராகப் பரிணாமம் பெறுகிறார். சோமுவின் சிறுவயது அனுபவம் பணம்தான் கடவுள் என்று பாவித்தது. சோமு சோமசுந்தர முதலியாராக மாறிய பின் பணம், அதைப் பற்றிய சிந்தனைகள், அதிகாரம், புகழ், செல்வாக்கு, பணத்தினால் சேர்ந்த உறவுகள் என அனைத்தையும் பெற்று அனுபவிக்கிறார். ஒரு கட்டத்தில் தெய்வங்களாகப் போற்றிய அவையனைத்தையும் பற்றிய மதிப்பீடுகள் தாழ்நிலை எய்துகின்றன. எனவே, அதையனைத்தையும் துறந்து உண்மை வாழ்வை உணர்ந்ததை பொய்த்தேவு நாவல் காட்டுகிறது.

மற்றொரு நிலையில், சாம்பமூர்த்தி ராயரும் மறுமை வாழ்விற்கான லட்சியமாகத் தான் தானங்களிலும் தருமங்களிலும் பூசைகளிலும் கண்மூடித்தனமாக ஈடுபட்டார். அவரும் ஒரு கணத்தில் போற்றிய இவையனைத்தையும் துறந்து பண்டாரமாகச் செல்கிறார். பொருள் என்று மட்டுமல்ல மனிதன் ஏற்றுக்கொண்ட எல்லா லட்சியங்களையும் இப்படிப் புறக்கணிக்க முடியும் என்பதுதான் திருவாசகத்தின் வரிகள் எனக்கு உணர்த்திய உண்மை என்று க.நா.சு முன்னுரையில் குறிப்பிடுவது போல, சாம்பமூர்த்தி ராயரும், சோமு முதலியாரும் லட்சியமாக ஏற்றுக்கொண்ட ஒன்றை, போற்றிய தெய்வங்களைப் புறக்கணிக்கின்றனர். இன்றைய வாழ்விலும் இவ்விருவரைப் போன்றவர்கள் நம்முடன் இல்லாமல் இல்லை. இவ்வாறு காலந்தோறும் மனிதனின் லட்சியங்களைப் போலவே அவன் சுயநலத்திற்காக உருவாக்கிய தெய்வங்களும் உலகம் தோன்றிய நாள் முதல் இன்று வரை விநாடிக் ஒரு தெய்வம் தோன்றுவதும் அதைப் போற்றுவதும் அதைவிடுத்து இன்னோர் தெய்வத்தைப் போற்றுவதும் விடுப்பதுமான நிகழ்வுகள் தொடர்ந்து நிகழ்ந்து கொண்டே உள்ளன என்ற க.நா.சு வின் இக்கருத்தாக்கம் முரணாகத் தோன்றலாம் ஆனால், அதுதான் உண்மை என்ற கருத்தியலை இறுதிவரை வலியுறுத்தி பொய்த்தேவு நாவலை ஆசிரியர் படைத்துள்ளார் (Subramanyam, 2007).

க.ந.சுவின் இம்மதிப்பீடுகளால் நாவல் எழுந்த காலத்தில் பல விமர்சனங்களைப் பெற்றது. ஆனால் உண்மையில் க.நா.சு வின் மேற்கூறிய கருத்தாக்கங்கள் ஏற்புடையதாகவே தோன்றுகிறன. பண்டைக் காலத்திலும் அதனைத் தொடர்ந்தும் தமிழ்ச் சமூகத்தில் கடவுள் நம்பிக்கை பற்றி, ஒவ்வொரு காலகட்டமாக அறிய முயலும் போது மனிதனின் தேவைக்கு ஏற்ப கடவுள் தெய்வம் பற்றிய கருத்தாக்கங்கள் பல்வேறு மாற்றங்களை அடைந்துள்ளதை அறிய முடிகிறது. க.ந.சுவின் மேற்கூறிய கருத்தாக்கத்தை நிருவும் விதமாக, மக்களிடம் கடவுள் தெய்வம் பற்றிய உருவாக்கங்கள் எவ்வாறு எழுந்தன, போற்றப்பட்டன என்பது பற்றி அறிஞர் பெருமக்களின் ஆய்வு மூலங்களில் கீழ்வருமாறு அறிவோம்.

## கடவுள் பற்றிய அறிஞர்களின் கருத்தாக்கங்கள்

தொ.பரமசிவன் இனக்குழு சமூகத்தின் வாழ்க்கை முறையைக் குறிப்பிட்டு, அக்குழுக்கள் சிதைக்கப்பட்டு அரசு, நாடுகள் உருவான வளர்ச்சிப் போக்கில் அச்சமூகத்தின் தேவைகள் எவ்வாறு எல்லாம் மாற்றம் பெற்றன என்றும், அவர்கள் வணங்கிய தெய்வங்களும் தெய்வநம்பிக்கைகளும் எவ்வாறெல்லாம் வேறுபட்டன என்பதையும் கூறி, அத்தெய்வங்களுக்கு மக்கள் தங்களின் தொழில் அடிப்படையில் எவ்வாறு உருவமும் குணமும் கொடுத்துப் போற்றியுள்ளனர் என்பதையும் வழிபாடு பற்றியும் விரிவாக விளக்குகிறார் (Janakiraman, 2021).

"காடுகளில் கூட்டம் கூட்டமாகத் திரிந்து மனிதன் தரைமீது கிடந்தவற்றைப் பொறுக்கியும், தரையைத் தோண்டியும் உணவைச் சேகரித்தான். பின்னர் வேட்டையாடினான் மீன்பிடித்தான், பின்னர் கால்நடைகளைப் பழக்கினான், மேய்ச்சல் நிலம் தேடி இடம்பெயர்ந்தான், அக்காலத்தில் பெண்கள் கண்டுபிடித்த விவசாயத்தைக் கால்நடைகளின் துணைகொண்டு வளர்ந்தான், போரில் தான் வென்ற பகைவர்களின் உடல் உழைப்பினைக் கொண்டு பயிர் நிலங்களின் அளவைப் பெருக்கினான், ஒவ்வொரு கட்டத்திலும் அவனுக்கு இயற்கை துணைசெய்தது. சில நேரங்களில் பழிவாங்கியது. மனிதக் கூட்டங்கள் இடையறாது போராடி வளர்ச்சி பெற்றன. வாழ்நிலை, நம்பிக்கை இன்னும் பல பாரணங்களால் அவை இனக்குழுக்களாயின. விவசாயம் பெருகிய நிலையில் தனிச் சொத்துடைமை வளர்ந்தது, போர்களும் பெருகின, இனக்குழுக்கள் தம்முள் போராடின, தொடர்ந்த போராட்டங்களால் இனக்குழுக்கள் கரைந்து அரசுகளும், நாடுகளும் உருவாயின. தோற்றுப் போனவர்கள் கடுமையான உடலுழைப்பிற்குத் தள்ளப்பட்டனர். வென்ற கூட்டத்தார் உடலுழைப்பிலிருந்து விலக ஆரம்பித்தனர். நாளடைவில் உடல் உழைப்பு இல்லாதவர்கள் உடைமையாளராகவும், மேல்தட்டு மக்களாகவும் மாறிவிட்டனர். இவ்வளர்ச்சிப் போக்கில் ஒவ்வொரு கட்டத்திலும் சமூகத்தின் தேவைகள் மாறுபட்டன. அதற்குத் தகுந்தாற்போல தெய்வங்களும், தெய்வநம்பிக்கைகளும் வேறுபட்டன, வளர்ந்தன" என்பார் (Paramasivan, 1995).

மேலும் அவர், நாட்டுப்புறக் காவல் தெய்வங்கள் எவ்வாறு உருவாக்கப்பட்டன, அதற்கு எத்தகு உருவம் கொடுத்து வழிபடுகள் நிகழ்த்தப்பட்டன என்பதை விளக்கும் போது, "தெய்வங்களின் வடிவமும் குணமும் அவை சார்ந்த சமூகத்தின் தேவைகளையொட்டி அமைந்தவைதான். கால்நடை வளர்ப்போரின் தெய்வம் மாடுகள், கன்றுகள் சூழ்ந்தபடி கையில் புல்லாங்குழலுடன்தான் இருக்க முடியும். உழவர்களின் தெய்வம் மழை தருகின்ற இந்திரனாகவோ அல்லது கையிலே கலப்பை ஏந்திய பலராமனாகவோதான் இருக்க முடியும். சுருக்கமாகச் சொன்னால் ஒரு குறிப்பிட்ட இனக்குழு(மக்கள் கூட்டம்) என்ன வகையான உற்பத்தி முறையினைச் சார்ந்திருக்கிறதோ அதைப் பொறுத்து அத்தெய்வங்களின் வடிவங்களும் குணங்களும் அத்தெய்வத்தைப் பற்றிய கதைகளும் அமையும் என்பார்.

நம்முடைய கிராமப்புறத்தின் தேவதைகள் எல்லாம் கையில் காவலுக்குரிய ஆயுதங்களையே ஏந்தியிருக்கின்றனவே, ஏன்? பயிரைக் காத்தல் கண்மாயிலிருந்து பாய்கின்ற நீரைக் காத்தல், விளைந்த பயிரை பகைவரிடமிருந்து காத்தல், அறுவடை செய்த தானியங்களைக் காத்தல், உழவுக்கு வேண்டிய கால்நடைகளைப் பகைவரிடமிருந்து காத்தல், ஊர் எல்லையில் நின்று எதிரிகளிடமிருந்து ஊரைக் காத்தல், இந்த காப்பு நடவடிக்கைகள்தான் நேற்றுவரை கிராம பொருளாதாரத்தின் அடிப்படை. எனவே, இந்த மக்களின் தெய்வங்களெல்லாம் இந்த மக்களைப் போலவே ஏதேனும் ஓர் ஆயுதம் ஏந்தி காவலுக்குரிய வயல்களின் ஓரத்திலும் கண்மாய் கரையிலும், ஊர் மந்தையிலும் ஊர் எல்லையிலும் அயராது கண்விழித்து நிற்கின்றன. இவை உட்காருவதும், கண்மூடுவதும் கிடையாது. இந்த மக்களைப் போலவே இத்தெய்வங்களும் முறுக்கிய மீசையும் வரிந்து கட்டிய வேட்டியுமாகச் சட்டையில்லாமல் (சில நேரங்களில் தலைப்பாகையுடன்) கள்ளும் கறியும் உண்பவையாக வாழ்கின்றன" என்பார் என்பார் (Paramasivan, 1995). இவ்வறிஞரின் விளக்கத்தைப் போலவே, பண்டைய வரலாறுகளையெல்லாம் ஆய்வு செய்து சிறந்த வரலாற்று ஆவணங்களைப் பதிவு செய்துள்ள டி.டி கோசாம்பி, பாதுகாப்புக் கருதியே தெய்வங்கள் மக்கள் வாழ்வில் போற்றப்பட்டன என்றும், தெய்வத்தின் தோற்றம், சடங்குகள், வழிபாட்டுப் பரவல், நம்பிக்கைகள் போன்றவற்றை விளக்குகிறார்.

"பாதுகாப்பை வேண்டி தெய்வங்கள், பூதங்கள் ஆகிய இரண்டுமே போற்றப்படுகின்றன. சில விவசாயிகளின் கனவில் ஒரு தேவதை காட்சி தருவார். (வேதாளம் போன்ற பேய்க்கடவுள் அல்லது இறந்த உறவினரின் ஆவியும் மிக அரிதாகக் காட்சி தருவதுண்டு) அந்தத் தேவதை அல்லது பேய்க்கு ஏற்கெனவே பலியிடம் இருக்குமேயானால் பொதுவாக அவர்கள் இதுபோன்ற தீக்கனவுகளிலிருந்து தப்புவதற்காக, சிலஉயிர் பலிகளை வழங்குவார்கள். (இக்காலத்தில் ஒரு தேங்காய் அல்லது கோழி, மிகவும் அவசியமானால் ஒரு வெள்ளாடு) ஒரு பேய் மேற்கொண்டு கோபமடையாமல் இருப்பதற்கு நடுகல் அமைக்கப்படும். சில சமயத்தில் கனவில் புதிய இடம் பார்த்து அந்த தேவதை தோன்றுவதுண்டு. அந்த வருடத்தில் நடைபெறும் விளைச்சல் அமோகமாக இருக்குமேயானால் தெய்வவழிபாடு அந்த இடத்தில் நிறுவப்படுகிறது. குறிப்பிட்ட கனவைக் கண்ட அந்த விவசாயியின் குடும்பம் அவ்வழிபாட்டைத் தொடர்ந்து நடத்துகிறது. அத்தேவதையின் விக்கிரகத்தைச் சிவப்பு நிறம் பூசப்பட்ட ஒரு சாதாரண கல் எடுத்துக்காட்டும். அல்லது அந்த இடத்தில் நேர்த்தியற்ற கற்சிலையொன்றை நடுவார்கள், அதன்தோற்றம் அது உருவான காலத்தை விட மேலும் 5000 ஆண்டுகள் பழைமையுடைத்தோ என்ற எண்ணத்தைத் தோற்றுவிக்கும். பிறகு அப்புதிய வழிபாட்டை அக்குடும்பம் கவனித்துக் கொண்டு வருகிறது. பேராபத்து, பஞ்சம், கொள்ளைநோய் போன்ற அழிவுகளிலிருந்து கிராம சமூகத்தை அந்தத் தேவதை 'காப்பாற்றுமேயானால் அவ்வழிபாடு கிராமம் பூராவும் பரவக்கூடும்." என்பார் (Kosambi, 1989). தி.சு. நடராசன் இக்கடவுள் சமயம் பற்றிய கருத்தாக்கம் திடீரென வந்துவிடுவதில்லை. ஒவ்வொரு காலகட்டத்திலும் ஒரு சமூகத்தின் நலனுக்கு ஏற்ப அக்குழுவினரால் அவர்களின் நலனுக்கு ஏற்ப பொருளாதார சமூக நிலையில் ஆதிக்கம் செலுத்திய பகுதியினரால் உருவாக்கப்பட்டது என்ற கருத்தை எடுத்துரைத்துள்ளார்.

"கடவுள் வழிபாடு என்னவாக, எப்படியாக இருந்தது? இது, எப்போதும் விவாதத்திற்குரிய ஒன்றாகவே இருந்து வந்திருக்கிறது. குறிப்பாக, ஒற்றைக் கடவுள், ஒற்றைப் பெருந்தெய்வம்-என்ற கருத்துநிலை கொண்டவர்களுக்கு இது முடிவற்ற விவாதமாகவே இருந்துவந்திருக்கிறது. தொடக்கம், மூலம் என்பது பற்றிய முடிவற்ற சர்ச்சைகள் ஒருபக்கம் இருக்க, இன்னொன்று நாம் முக்கியமாக அறிய வேண்டும். சமயம் என்பது ஒரு நிறுவனம். பல கருத்தியல்களும், பல பனுவல்களும், பல விளக்கங்களும் வினாக்களும் கொண்டு அமைந்த ஓர் ஒழுங்கமைவு மேலும் எந்த நிறுவனமும் ஒழுங்கமைவும் எதுவும் திடீரென்று வந்துவிடுவதில்லை. சமயம், கடவுள் பற்றியதாக இருந்தாலும், கடவுள் சர்வசக்தி படைத்தவராக வருணிக்கப்பட்டாலும், சமயத்தைக் கடவுள் உருவாக்கவில்லை. பிறகு, எப்படி அது உருவானது என்று கேட்கிறாயா? முரண்பாடுகளும் நெருக்கடிகளும் கொண்டு வளருகின்ற மனிதசமூகத்தில் பொருளாதார நலனிலும் சமூக நிலையிலும் ஆதிக்கம் செலுத்தும் சில பகுதியினரால்-சிந்தனைத் திறன் கொண்ட அவர்களின் பிரதிநிதிகளால்- தங்களுடைய கூட்டத்தார்க்கும், குழுவினர்க்கும் அவர்களின் நலனுக்கும், ஏற்ப, அது உருவாக்கப்பட்டது." என்பார்(Natarajan, 2008). பண்டைத் தமிழர் வழிபாடு என்ற நூலில், மேற்குறிபிட்ட அறிஞர்களின் கருத்தாக்கங்களை எல்லாம் ஒருசேர விளக்கும் க.கைலாசபதி வரலாற்றுக்கு முற்பட்ட தமிழகம் தொடங்கி பல்லவர் சோழர் கால சமய வரலாறுகள் அவற்றின் தோற்றுவாய், கடவுள்களின் தோற்றம், சமயங்களின் வளர்ச்சி வீழ்ச்சி, சமய நிறுவனங்களின் தோற்றம் என சமயம் எனும் பரந்த பரப்பில் ஆராய்ச்சிக் கட்டுரைகளைத் தந்துள்ளார். அவர் தம் நூலில் பண்டைய மக்கள் வழிபட்ட கடவுள்களின் எண்ணிக்கையை, வழிபாட்டு முறைகளை ஆறு நிலைகளில் உள்ளடக்குவார். அவை,

1. சங்க இலக்கியங்களில் சுட்டப்படும் தெய்வங்களாக, மலையுறை தெய்வம், காடுறை தெய்வம், நீருறை தெய்வம் போன்றவற்றோடு ஆவி பற்றிய கருத்தாக்கங்களாக, அணங்கு, பேய் மகளிர், பூதகணகங்கள், சாலினி, அகவன் மகள், கட்டு விச்சி, வேலன் போன்றவற்றைக் கூறலாம். வழிபாட்டு முறைகளாக கொற்றவை வழிபாடு, முருக வழிபாடு, நடுகல் வழிபாடு போன்றவற்றைக் குறிப்பிடலாம்.
2. வரலாற்றுக்கு முற்பட்ட இந்தியச் சமூக அமைப்பில் ஏராளமான கறுப்பினப் பழங்குடி மக்கள் இந்தியத் துணைக்கண்டம் முழுவதும் பரவி வாழ்ந்தார்கள். இம்மக்களின் கடவுளாக கிருஷ்ணன், கண்ணன், இராமன், மாயோன் போன்ற கறுப்பர் இனக் கடவுளர்கள் திகழ்ந்தார்கள். இக்காலக்கட்டத்தில் இந்திரன், வருணன், மித்திரன், பிரசாபதி ஆகிய கடவுள்களைத் தனித்

தனியாக வணங்கும் நான்கு வழிபாட்டு நெறிகளைக் கொண்ட ஆரியக் குழுக்கள் இந்தியாவில் நுழைந்தனர். பூர்வீப் பழங்குடி மக்களுக்கும், ஆரியர்களுக்குமான மிகப்பெரிய போராட்டத்தில் ஆரியர்களுக்கு மிகப்பெரிய வெற்றி கிடைத்தது.

இந்தக் காலக்கட்டத்தில் ஏற்பட்ட பண்பாட்டு வீழ்ச்சியால் வேதகால ஆரியர்களின் சமயத்தை வீழ்த்தி சமணமும், பௌத்தமும் எழுச்சி பெற்று வளர்ச்சி பெற்றது. அதற்கு அடுத்த காலக்கட்டத்தில்தான் சமண பௌத்தத்தை வீழ்த்தி வடஇந்தியாவில் வைதீக சமயம் தோன்றியது. வைதீக சமயம் என்பது, வேதசமயக் கருத்துக்களையும், சமண பௌத்த சமயக் கூறுகளையும், பூர்வீகப் பழங்குடி மக்களின் சமய நெறிகளையும் தன்னுள் அடக்கிய புத்துயிர் பெற்ற சமயமாக உருவானது. வேதகாலத்தில் போற்றப்பட்ட இந்திரன், வருணன், மித்திரன், பிரசாபதி போன்ற தெய்வங்கள் வீழ்ச்சியடைந்து இக்காலக்கட்டத்தில் சிவன், விஷ்ணு, பிரம்மா போன்ற தெய்வங்கள் முப்பெரும் தேவர்களாக உருவாக்கப்பட்டதைப் பார்க்க முடிகிறது.

மேற்குறிப்பிடப்படும் பூர்வீக சமய நெறிகள் என்று பார்க்கும் போது, நாகர் வழிபாடு, நந்தி வழிபாடு, இயற்கை வழிபாடு இவற்றோடு வரலாற்றுக்கு முந்திய காலகட்ட சிவலிங்க வழிபாடு, பசுபதி வழிபாடு, ருத்ர வழிபாடு என இவற்றையொல்லாம் ஒருங்கிணைத்த சைவம் என்ற சமயமும் கடவுள்களும் உருவானது.

இதேபோல வைணவம் என்பது, கிருஷ்ணன், கண்ணன், இராமன், மாயோன் போன்ற கறுப்பின இந்திய பழங்குடிகளின் கறுப்புத் தெய்வங்கள் எல்லாம் இணைக்கப்பட்டு அவற்றோடு அவதாரக் கொள்கைகள் உருவாக்கப்பட்டு வைணவ சமயமும் கடவுள்களும் உருவானது. இவ்வாறு சைவம் வைணவம் சார்ந்த கடவுள் உருவாக்கங்கள், வழிபாட்டு நெறிகள் தோன்றியதைக் குறிப்பிடலாம்.

3. பௌத்தம் சமணம் ஆசிவாகம் ஆகிய சமயங்களின் தோற்றம் கடவுள்கள் உருவாக்கம்.
4. வேதகாலக் கடவுளர்களாக சிவலிங்க வழிபாடு, பசுபதி வழிபாடு, ருத்ர வழிபாடு ஆகியவற்றைக் கூறலாம். இவற்றோடு இதிகாசங்கள் உபநிஷங்கள் குறிப்பிடும் கடவுள்களைச் சுட்டலாம்.
5. பிற்காலத்தில் பரவிய இசுலாம் கிறித்துவ சமயங்களின் தோற்றம் கடவுள்கள் உருவாக்கம்.
6. மக்கள் தெய்வங்கள் என்ற தளத்தில், குலதெய்வம், காவல் தெய்வங்கள், வீட்டுத் தெய்வங்கள், முன்னோர் தெய்வங்கள் உருவாக்கத்தையும் கூறலாம் என்பார்.

மேலும் இத்தெய்வங்களின் வழிபாட்டு முறைகளாக, ஆதி வழிபாடு, மானா ஆற்றல், இயற்கை வழிபாடு, குலக்குறி வழிபாடு, முன்னோர் வழிபாடு என்றதாக இந்த ஆறு வகையான நிலைகளில் தெய்வங்களின் படைப்பாக்கத்தையும், சமயங்களின் பிரிவுகளையும், வழிபாட்டு முறைகளையும் அடக்கலாம் என்பார் (Kailasapathy, 2016).

மேற்கண்ட அறிஞர்களின் விளக்கங்களின்படி, காலங்காலமாக மனிதனின் தேவைகள் பாதுகாப்பு வேண்டியே பல்வேறு நிலைகளில் தெய்வங்கள் படைக்கப்பட்டுள்ளன, போற்றப்பட்டுள்ளன. மனிதனே அக்கடவுளுக்கும் தெய்வங்களுக்கும் உருவமும், வழிபாட்டு முறைகளையும், சடங்குகளையும் உருவாக்கியுள்ளான். அவனின் சுயநலத்திற்காகவே சமய நிறுவனங்கள் உருவாக்கப்பட்டன. இக்கருத்துக்களையெல்லாம் அடியொற்றிப் படைக்கப்பட்ட க.நா.சு வின் பொய்த்தேவு நாவல், “மனிதனுக்கு ஒரு தெய்வம் திருப்தி அளிப்பதில்லை. பல தெய்வங்கள் தேவையாக இருக்கின்றன. ஓவ்வொரு விநாடிக்கும் ஒரு தெய்வம் தேவையாக இருக்கிறது என்று சொல்லுவதும் மிகை ஆகாது. இந்த விநாடியின் ஒரே தெய்வம் அடுத்த விநாடி பொய்த்துவிடுகிறது பொய்த்தேவாக ஆகிவிடுகிறது (க.நா.சு, பொய்த் தேவு, முன்னுரை) என்ற கடவுள் தெய்வம் பற்றிய இக்கருத்தாக்கங்கள் நாவல் வெளிவந்த காலத்தில் பல விமர்சனங்களைப் பெற்று இருந்தாலும், அவரின் இக்கருத்தாடல் ஏற்புடையதாகவும், எண்ணத்தக்கதாகவும் உள்ளது.

ஏன் எனில், பண்டைத் தமிழ்ச் சமூகத்தின் தெய்வங்கள், கடவுள்கள் பற்றிய அறிஞர்களின் மதிப்பீகளை ஆய்ந்து நோக்கும் போது, காடுகளில் வேட்டையாடித் திரிந்த மனிதன், உணவுத் தேடலில் பல இடர்பாடுகளை அனுபவித்தான். அவ்விடர்பாடுகள் ஏற்படுத்திய அச்சத்திலிந்து தம்மைக் காத்துக் கொள்ளவே தெய்வங்களை உருவாக்கினான். அரசும் நாடும் உருவாக்கப்பட்ட நிலையில் மக்களின்

தேவைகள் சார்ந்து, தொழில்சார்ந்து, பாதுகாப்புக் கருதி, அவர்களின் சுயநலம் கருதியே தெய்வங்கள் போற்றப்பட்டன, உருவங்கள் கொடுக்கப்பட்டு சடங்குகள் வழிபாடுகள் நிகழ்த்தப்பட்டன.

அவ்வகையில் இன்றைய காலகட்டத்தில் பணம், அதிகாரம், சுயநலம் என்ற சக்திகளையே மனிதர்கள் கடவுளுக்கு நிகராகப் போற்றுகின்றனர். பணத்தைச் சார்ந்துதான் மனிதனின் அனைத்து தேவைகளும் பூர்த்தி செய்யப்படுகின்றன. பணமே மூல சக்தியாக விளங்குகிறது. ஆதிமனிதனின் உணவுத் தேவை, தொழில் சார்ந்த அச்சத்தினால் பாதுகாப்புக் கருதி தெய்வங்கள் உருவாக்கப்பட்டதைப் போல, இன்றைய காலக்கட்டத்தில் பணமும் அதைப் பெறுவதற்கான வழிகளையும் தெய்வங்களாகப் போற்றுகின்றனர். இக்காலங்களில் பணம் பெறுவதற்கான கருவியாக குபேர வழிபாடு லட்சுமி தேவி வழிபாடு நிதழ்த்துவதையும் கூறலாம். அதேபோல வீட்டிலும் தொழில் சார்ந்தும், குபேரன் உருவங்களை வைத்தால் பணம் பெருகும் என்ற நம்பிக்கை கடைபிடிக்கப்படுவதைக் காணலாம். இவ்வாறு நம் தேவைகளைப் பெறுவதற்கான கருவியாகத்தான் தெய்வங்களை கடவுளைப் படைக்கின்றோம் போற்றுகின்றோம்.

## முடிவுரை

பண்டைய மனிதன் இயற்கையின் பேராற்றலைக் கண்டு அச்சமடைந்தான். அச்சத்தின் காரணமாக கடவுள் பற்றிய சிந்தனை உருவானது. தன்னால் உணர முடியாத அவ்வாற்றலைப் பணிவதன் மூலம் அமைதிப்படுத்த முயன்றான். அதன் விளைவாக மந்திரங்களையும், வழிபாட்டு முறைகளையும், சடங்குகளையும் உருவாக்கினான். தம் தேவைகள் பாதுகாப்புக் கருதி காலத்திற்குக் காலம் தெய்வங்களை உருவாக்கினான். அவற்றிற்கு உருவமும் தோற்றமும் கொடுத்தான். காலத்திற்குக் காலம் பல்வேறு மாறுபாடுகளை அடைந்த கடவுள் பற்றிய இக்கருத்தாக்கங்கள், இன்றைய காலத்தில் மனிதனின் அனைத்து தேவைகளையும் அடையக் கருவியாக இருக்கும் பணத்தினையும், அதிகாரத்தையும், அவற்றால் பெறப்படும் பயன்களையும் கடவுளுக்கு நிகராக உயர்ந்த சக்தியாகப் போற்றுகின்றனர். எந்த நிமிடம் கடவுளாகப் போற்றிய இவையனைத்தும் பொய் என்று உணர்கிறோமோ! அந்த நிமிடம்தான் உண்மையான கடவுளையும் வாழ்வையும் உணர்வோம். உண்மையான கடவுள் தெய்வம் என்பது என்ன? "என்று தன்னை முழுமையாக அறிகிறோமோ! வாழ்வின் நிலையாமையை உணர்கிறோமோ!" அன்று உண்மையான கடவுளை அறிய உணர முடியும். நம் அறிவுக்கு அப்பாற்பட்ட ஒரு சக்தி இவ்வுலகில் உள்ளது என்பது உண்மை. அதைக் கடவுளாகக் கூடக் கூறலாம். நாம் தீயநெறியில் செல்ல முயலும் போது நம்மை நல்வழிப்படுத்த மனதில் எழும் குரலைக் கூட கடவுள் தெய்வம் என்று கூறலாம். இக்கடவுளை அறிய அறிவுடன் கூடிய சிறிது அறியாமையோடு உணர முயல வேண்டும் என்று இக்கருத்துக்களை எல்லாம் கருவாக் கொண்டே க.நா. சு தம் நாவலுக்கு பொய்த்தேவு எனத் தலைப்பிட்டுள்ளார். கடவுளைப் பொய்மை எனக் கூறவில்லை. மக்கள் தம் தேவைக்கான கருவியாகத் தெய்வத்தை உருவாக்கியதையும் உருவம் கொடுத்ததையும்தான் பொய் என்று தம் படைப்பின் வழி விளக்கியுள்ளார். மனிதன் வாழும் போதே பொய்த்தேவை விடுத்து உண்மைக் கடவுளை உணர வேண்டும் என்ற கருத்தியலை வலியுறுத்திப் படைக்கப்பட்ட க.நா. சு வின் 'பொய்த்தேவு' நாவல் அனைவரும் படித்து உய்துணர வேண்டிய உன்னத படைப்பு ஆகும். படிப்பவரின் மனங்களில் பல்வேறு அர்த்தங்களையும், பரிணாமங்களையும் ஏற்படுத்தும் சிறந்த கலைப்படைப்பு ஆகும்.

## References


Gandhi, k., (2008) Tamil Palakkavalakkankalum Nampikkaikalum, Chennai, India.

Janakiraman, I. (2021) The Concept of God in Siddha Literature, International Research Journal of Tamil, 3(S-2), 201-206. https://doi.org/10.34256/irjt21s238

Kailasapathy, K., (2016) Pandai Tamizhar Vaazhvum Vazhipaadum, Kalachuvadu Publications Pvt. Ltd., Nagercoil, India.

Kosambi, TT., (1989) Pandaiya India Panpatum Nakarikamum, translated by Narayanan, R.S., New Century Book House, Chennai, India.

Natarajan, TS., (2008) Tamilakatil Vaitika Camayam: Varalarum Cakkanaikalum, New Century Book House, Chennai, India

Paramasivan, Tho., (1995) Theivangalum Samooka Marabukalum, New Century Book House, Chennai, India

Subramanyam, Ka. Naa., (2007) Poithevu, Akaram publisher, Thanjavur, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License